

முதலமைச்சர் அவர்களால் 23.12.2025 அன்று திறந்து வைக்கப்பட்ட தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தினை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா நேற்று (26.12.2025) பார்வையிட்டார். உடன் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஸ்ரீ இராஜேஸ்வரி, வீ.கவி கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### தலா 8 கிராம் தங்க நாணயத்துடன்

# வடசென்னையில் 241 பயனாளிகளுக்கு - ரூ.1.16 கோடி திருமண நிதி உதவி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!



சென்னை, டிச. 27-

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.12.2025) சென்னை, ஜார்ஜ் டவுன், பாரதி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் வட சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 241 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூபாய் 1 கோடியே 16 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவியினையும் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் மகளிருக்கு உதவிடும் வகையில் ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர்.தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், என நான்கு வகையான திருமண நிதியுதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின் கீழ் பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு பயின்று தேர்ச்சிப் பெற்ற பெண்ணிற்கு திருமண நிதியுதவியாக ரூ.50,000/மும், பத்தாம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற பெண்ணிற்கு திருமண நிதியுதவியாக ரூ.25,000/மும் வழங்கப்படுகிறது. இத்துடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, நேற்று (26.12.2025) வட சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த, பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு முடித்த 224 பயனாளிகளுக்கு ரூ.50,000/வீதம் ரூபாய் 1 கோடியே 12 லட்சமும், பத்தாம் வகுப்பு முடித்த 17 பயனாளிகளுக்கு ரூபாய் 4 லட்சத்து 25 ஆயிரம் என மொத்தம் 241 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 16 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவித் தொகையினையும், திருமாங்கல்யம் செய்வதற்கு தலா 8 கிராம் தங்க நாணயங்களையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி. ஆர். பிரியா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, இராயபுரம் மண்டல குழுத்தலைவர் ஸ்ரீராமலு அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர்கள் செல்வி.ம.ஹரிதா (வடசென்னை), திருமதி. வெ.முத்துச்செல்வி (தென் சென்னை) உட்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இன்று– 27, நாளை 28 – ஜனவரி 3, 4 தேதிகளில் வாக்காளர் சிறப்பு முகாம்!

# விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

### சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு வேண்டுகோள்!

சென்னை, டிச.27

சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க. நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர், ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியலை பிரித்து பகுதி கழக/ வட்டக் கழகச் செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு அந்த வரைவு வாக்காளர் பட்டியல் BLA 2வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் பட்டியலும் மற்றும் விடுபட்ட வாக்காளர்கள் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தந்த பூத் BLA2,BDA, BLCபி மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல் பணியில் ஈடுபட வேண்டும் என்றும், பூத் வாரியாக வாக்காளர் பட்டியலை கழகத்தினர் அனைவரும் சரி பார்த்து எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும், வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்கப் பெறாத வாக்காளர் பட்டியலையும் மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து மொத்தத்தில் ஒவ்வொரு பாகத்திலும் நம்முடைய கழக வாக்காளர் கழக ஆதரவு வாக்காளர் எவர் பெயரும் விடுபடாத வகையில் அனைவரையும் படிவம் 6ல் வாக்காளர்களாக சேர்த்து முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்றும் மேலும் இறந்த, இடம் மாறிய வாக்காளர்களின் பெயர்களை மீண்டும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருந்தால் அவர்களின் பெயர்களை படிவம் 7ல் நீக்கிடும் பணியில் உடனே ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் விடுபட்ட வாக்காளர்கள் புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்காக வருகிற டிசம்பர் 27 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய நான்கு நாட்கள் நடத்தப்படும் சிறப்பு முகாம்களில் கழகத்தினர் அனைவரும் கடுமையாக உழைத்து வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இருந்தும் எஸ் ஆர் படிவம் கிடைக்கப் பெறாதவர்கள் எஸ்.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் மேலும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் சேர்க்கும் முக்கியப் பணியில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.



குன்றத்தூர் மத்திய ஒன்றியம் சோமங்கலம் ஊராட்சியில் பாகம் 243–ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் – தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மத்திய ஒன்றிய கழக செயலாளர் இ.மணி, மத்திய ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



சென்னை ராஜா அண்ணாமலைபுரம் திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலை அரங்கத்தில் நேற்று (26.12.2025) நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நாடக விழாவில் கலந்துகொண்டு கலைநிகழ்ச்சியினை கண்டுகளித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டு!

# விக்டோரியா பொது அரங்கம் பழமை மாறாமல் திறப்பு!


### புதிய தலைமுறை தொலைக்காட்சி பாராட்டு!

சென்னை,டிச.27-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் புனரமைக்கப்பட்ட “விக்டோரியா பொது அரங்கம்” திறந்து வைக்கப்பட்டது குறித்து புதிய தலைமுறை தொலைக்காட்சி வெளியிட்ட சிறப்பு ஒளிப்பரப்பு நிகழ்ச்சி வருமாறு:

சென்னையில் வரலாற்று சிறப்பு மிக்க விக்டோரியா பொது அரங்கம் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. 32 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன். பாரம்பரிய கட்டடக்கலை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ளது. விக்டோரியா பொது அரங்கின் சிறப்பம்சங்கள் குறித்து புதிய தலைமுறை செய்தியாளர் ரமேஷ் கூறியதாவது:

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கும் ரிப்பன் மாளிகைக்கும் இடையே இந்த விக்டோரியா பொது அரங்கம் திறக்கப்பட்டிருக்கிறது. 1880 இல் கட்டப்பட்ட இந்தக் கட்டிடம் பல காலங்களில் பல்வேறு விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.




1967 இல் மிகவும் பாதிப்படைந்த இந்தக் கட்டிடத்தை புதுப்பிப்பதற்காக அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா இதற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆனால் 60 ஆண்டுகளாக அந்தப் பணி நடைபெறவில்லை. அதற்குப் பிறகு 2009 ஆம்ஆண்டும் புதுப்பிப்பதற்காக பணம் ஒதுக்கினார்கள்.

2020 உள்ளிட்ட பல்வேறு கால கட்டங்களில் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு இருந்தாலும், தற்போது தான் 2023 இல் அடிக்கல் நாட்டப்பட்டு இதற்கான செயல்பாடு கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு தயாராகி இருக்கிறது. இந்த அரங்கில் என்ன மாதிரியான விஷயங்கள் இருக்கிறது என்றால் அருங்காட்சியகம் போன்ற விஷயங்களை உள்ளே சென்று நாம் பார்க்கலாம்.

விக்டோரியா பொது அரங்கத்தில் 3 தளங்கள் இருக்கின்றன. தரைத் தளத்தில் யார் யார் எல்லாம் உரை நிகழ்த்தினார்கள் என்கின்ற வரலாறும் எப்போதெல்லாம் பேசினார்கள் என்பது சொல்லப் பட்டிருக்கிறது. விவேகானந்தர், காந்தி, அண்ணா அதேபோல பல்வேறு தலைவர்களுடைய உரைகள் இங்கே நிகழ்த்துப்பட்டு இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் இங்கே மேடை நாடகங்கள். குறிப்பாக சபாபதி என்ற நாடகம் எப்போது திரையிடப்பட்டது என்பது குறித்தும் ரத்னாவளி என்கிற நாடகமும் , தூக்குத்தூக்கி போன்ற நாடகங்களும் எந்தெந்த தேதிகளில் நிகழ்த்தப்பட்டன என்பது குறித்தும் பிற நிகழ்ச்சிகள், நாடகத்தை தாண்டிலும் புத்தக வெளியீட்டு விழா போன்ற நிகழ்வுகளும் இங்கே நடைபெற்றிருக்கின்றன.



அதுமட்டுமல்லாமல் நில நடுக்கம் போன்று எதுவும் வந்தால் அதிலிருந்தும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக பல்வேறு புதிய கட்டுமானத் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தஅரங்கத்தினுடைய ஒரு பகுதியில் பழங்கால இசைக்கருவிகள் வைக்கப்பட்டிருக்கிறன்றன. அந்தக் காலத்தில் உபயோகப் படுத்தப்பட்ட பல்வேறு வகையான இசைக் கருவிகள் அதிக அளவில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை இரண்டுபக்கமும் பார்க்கலாம். அது மட்டுமல்லாமல் பல்வேறு இசைக் கருவிகள் இதற்கு முன்பு எங்கும் பார்க்காத அளவிற்கு அரிய வகை இசைக் கொடுக்கக் கூடிய கருவிகள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறன.

இந்த அரங்கத்தின் மையப்பகுதியில் 300 பேர் அமர்ந்து நாடகங்களையும் தலைவர்களின் உரைகளையும் கேட்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக இந்த அரங்கில் விவேகானந்தர், மகாத்மா காந்தி, அயோத்தி தாசப் பாண்டிதர், எம்.சி. இராசா, இரட்டைமலை சீனிவாசன் உள்ளிட்ட தலைவர்களும் இங்கே வந்து உரையாற்றி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் பொழுது போக்கிற்கு என்று எந்தவித ஒரு



அரங்கமும் இல்லாத காலத்தில், முதன் முதலாக இந்த விக்டோரியா அரங்கம் தான் பொது அரங்கமாக சென்னையினுடைய மையப் பகுதியில் அமைந்திருந்தது. அதே பழைமை மாறாமல் அதே இருக்கைகளோடு இங்கே அமைக்கப்பட்டு இருக்கிறது. இங்கே ஆன்லைனில் முன் பதிவு செய்துவிட்டு வந்து இந்த அரங்கை பார்வையிடலாம்.

இவ்வாறு புதிய தலைமுறை தொலைக்காட்சி சிறப்பு செய்தி வெளியிட்டிருக்கிறது.